அளித்திருக்கிறது. சொன்னதைச் செய்வோம் சொல்லாததையும் செய்கிறோம் என்கிறீர்கள். சொன்னதையும் செய்யவில்லை. ஆனால், Mark Twain என்ற அறிஞர் சொன்னார், பணக்காரன் ஏழையிடம் திருடும்போது வணிகம்; அரசாங்கம் ஏழைகளிடம் திருடும்போது வரி என்றான். 53 சதவிகிதம் மின் கட்டண உயர்வு, 150 சதவிகிதம் சொத்து வரி உயர்வு, பால் விலை உயர்வு, குடிநீர் வரி உயர்வு, குப்பை வரி உயர்வு என சொல்லாதவற்றை உயர்த்தி, பொதுமக்களையும், ஏழைகளையும் இன்றைக்குத் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. முடித்து விடுங்கள். (குறுக்கீடு) முடித்து விடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம், ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள். சொல்லி முடித்து விடுங்கள். முடித்து விடுங்கள். (குறுக்கீடு) உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு), பேசுங்கள். மைக் இருக்கிறது. பேசி முடித்து விடுங்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மூச்சுக்கு 300 முறை சமூக நீதி, சமத்துவம், திராவிட மாடல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (24–3–2023), வெள்ளிக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் ஐம்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 மார்ச் 23]

41. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

42. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)1

43. 2021–2022 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

44. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

45. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் தணிக்கை அறிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 80(9) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

46. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

47. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

49. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

50. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொண்ணூற்று மூன்றாவது ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

81. 2023–2024 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை (மானியக் கோரிக்கை எண் 5 – நீங்கலாக) மற்றும் வரவு–செலவுத் திட்ட வெளியீடு எண்கள் 56 முதல் 59 வரை மற்றும் 67 (58 புத்தகங்கள்).

82. 2023–2024 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

83. 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

84. 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–I.

85. 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு–பகுதி–II.

86. 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

87. 2023–2024 ஆம் ஆண்டிற்கான நலத்திட்டச் செலவினங்கள் குறித்த அறிக்கை.